பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 14 (26—2—68) திங்கள் ★ வெளியூர்: மாசி 15 (27—2—68) செவ்வாய் [இதழ்: 212

'செழுமை மிக்கது தமிழ் மொழி'

'வேறு மொழிகளின் உதவி அதற்குத் தேவையில்லை'

தாரா செரியன் விளக்கம்

"தமிழ் செழுமை மிக்க மொழி; எனவே, அதை மேலும் செம்மை படைபச்செய்ய வேறு மொழிக ளின் உதவி தேவையில்லை" என்று மகாராட்டிர ஆளுநர் துணை வியார் திருமதி தாரா செரியன்

(3-ம் பத்தி பார்க்க)

'தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி வர வழிகோலாதீர்'

'காங்கிரசார் திட்டங்களைத் தவிடுபொடி ஆக்குவீர்'

'யாருடைய தூண்டுதலுக்கும் ஆளாகாதீர்'— மாணவர்கட்கு அறிஞர் அண்ணா — இராஜாஜி வேண்டுகோள்

"ஒவ்வொன்றாய்க் காங்கிரசு அல்லாத மாநில அரசுகளைக் கவிழ்த்துப் 'பாவக் கறை' படிந்த மத்திய அரசின் கைகள், தமிழக மண்ணில் நிலையான ஆட்சியாக உள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கவிழ்த்து குடியரசுத் தலைவர் ஆட்சியை அமைத்திட முனைவதாகத் தெரிகிறது. ஐந்து நாட்களுக்கு முன்னேதான் வங்காளத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்தி, அறிக்கையில் கையெழுத்திட்ட குடியரசுத் தலைவர், நேற்று உத்தரப் பிரதேசத்தில் தம் ஆட்சியை அமைத்து அறிக்கை வெளியிட்டுள்ளார். இந்த நிலையில், தமிழகத்தில் நிலையாக உள்ள கழக அரசைக் கலைத்துவிடக் காங்கிரசார் முயலுகின்றனர்; அதற்கு இடம் கொடுக்கும் எந்தச் செயலையும் தமிழகத்தில் யாரும் — குறிப்பாக மாணவர்கள் — செய்திட வேண்டாம்"

என்று தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும், சுதந்தரக் கட்சித் தலைவர் இராஜாஜி அவர்களும் சேர்ந்து கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மாணவர்கள் யாருடைய தூண்டுதலுக்கும் இரையாகிவிடாமல், தனித் தமிழ்நாடு கோரித் தீர்மானம் போடுதல்—தேசியக் கொடி எரித்தல் போன்ற தவறான நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்கும்படி அந்த அறிக்கையில் வேண்டியிருக்கின்றார்கள்.

நேற்றைய முன்தினம் இராஜாஜி அவர்களின் வீட்டில் அறிஞர் அண்ணா அவர்கள் சந்தித்தபோது தமிழகப் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்களும் உடன் இருந்தார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், திரு. இராஜாஜி அவர்களும் வெளியிட்டுள்ள அந்தக் கூட்டு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

"காங்கிரசு அல்லாத அரசுகளைக் கவிழ்த்துவிட இந்தியப் பேரரசை நடத்தும் காங்கிரசுக் கட்சி திட்டமிட்டு வேலை செய்து, பல இடங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் புகுத்திவிட்டது.

தமிழகத்தில் அமைந்துள்ள அரசையும் எப்படியும் கவிழ்த்துவிடவும், இங்கும் குடியரசுத் தலைவர் ஆட்சியைப் புகுத்திவிடவும் அவர்கள் விரும்புகிறார்கள்.

தமிழகத்தில் இப்போதுள்ள அரசு கவிழ்க்கப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஆட்சி புகுத்தப்படுமானால், இந்தி ஆதிக்க எதிர்ப்பு அரசு கலைக்கப்பட்டு, இந்தி ஆதரவு அரசு அமைக்கப்பட்டுவிடும். இந்த நிலையை, இந்தி ஆதிக்கத்தைப் புகுத்தத் திட்டமிடுவோர் விரும்புகிறார்கள்! இந்த நிலையை உண்டாக்க அவர்கள், 'என்னென்ன கிளர்ச்சிகளை மூட்டிவிடலாம்' என்று ஆவலுடன் தேடுகின்றனர்!

'தமிழக அரசு, சட்டம்—சமாதானம் கெட்டுப்போகத் துணை செய்கிறது' என்றும், 'வன்முறைகளை வளர்த்துவிடுகிறது' என்றும் 'நாட்டைத் துண்டாடத் தூபமிடுகிறது' என்றும் பழிசுமத்தி—இதனைக் காரணமாகக் காட்டி தமிழகத்துத் தி மு.க. அரசை கவிழ்த்துவிட விரும்புகிறார்கள்!

மொழிப் பிரச்சினையில் உணர்ச்சி கொண்டுள்ள மாணவர்களால் கோவையிலும், மற்றும் சில இடங்களிலும் உள்ள பகுதியினர் தேசியக் கொடியை எரிப்பது—தனித் தமிழ்நாடு தீர்மானம் போடுவது—தனித் தமிழ்நாட்டுக் கொடி ஏற்றுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது அவர்களுக்கு (மத்தியில் உள்ள காங்கிரசுக்காரர்கட்கு) உதவியாக இருக்கிறது. இந்தச் செயல்களைத் தொடரும்படித் தூண்டிவிட்டு, இதையே காரணமாகக் காட்டித் தமிழக அரசைக் கவிழ்க்கத் திட்டம் போட்டு இருப்பதாகக் காணப்படுகிறது.

நாட்டுப் பிரிவினைக்காக நாம் இந்தி எதிர்ப்பு நடத்தவில்லை; 'இந்தியைப் புகுத்தக்கூடாது' என்று நாம் கூறும்போது, 'நாடு பிளவுபடக்கூடாது' என்பதுடன் சேர்த்தே கூறுகிறோம். இதனை அறிந்தும் மாணவர்களில் ஒரு பகுதியினர், 'எந்தப் பழி சுமத்தித் தமிழக அரசைக் கவிழ்க்கலாம்' என்று இந்தி ஆதிக்கத்தினர் திட்டமிடுகிறார்களோ—அந்தத் திட்டத்துக்குத் தங்களையும் அறியாமல் துணை செல்வதை உணர வேண்டுகிறோம்.

தமிழக அரசு கவிழ்க்கப்படுமானால், அது, 'இந்தி ஆதிக்க எதிர்ப்பு உணர்ச்சிக்கே அழிவை உண்டாக்குவது ஆகும்' என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மொழிப் பிரச்சினையில், இன்றுள்ள தமிழக அரசுக்குத் துணை நின்றே நாம் விரும்பும் நியாயத்தைப் பெறமுடியும் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறோம்.

தேசியக் கொடி எரித்தல்—தனித் தமிழ்நாடு கிளர்ச்சி போன்றவைகள் நடத்தப்படுவது, நமது இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியையே பாழ்படுத்திவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

நன்கு சிந்தித்து மாணவர்கள், எந்தத் தூண்டுதலுக்கும் செவி சாய்க்காமல், தேசியக் கொடி எரித்தல்—தமிழ்நாடு தனி நாடு ஆகத் தீர்மானம் போடுதல் போன்ற செயல்களில் ஈடுபடாதிருக்கும்படி வேண்டிக்கொள்கிறோம்.

இத்தகைய செயல்கள்மூலம், மொழிப் பிரச்சினை தீராது—நியாயம் கிடைக்காது! நியாயத்தைப் பெறுகிறவரையில் அழுத்தமும் அமைதியும், வன்முறை அற்றதும், நாட்டைப் பிளவுபடுத்தாததுமான முறைகளில் செயல்பட்டு நமது மாணவர்களின் நலன்களைப் பாதுகாத்திட நாங்கள் உறுதி கொண்டிருக்கிறோம்.

இன்றையத் தமிழக அரசு நீடித்து இருந்தால் மட்டுமே எங்கள் பணி வெற்றிபெற்றுத் தந்திட இயலும்; ஆகவே, மாணவர்கள் எமது திட்டத்தையும் செயல் திட்டத்தையும் உணர்ந்து, இப்போது அவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை நிறுத்தி, அமைதியை மீட்டுத் தந்திடும்படி கேட்டுக்கொள்கிறோம்."

செழுமை மிக்கது...

(5-ம் பத்தி தொடர்ச்சி)

அவர்கள் 'இந்தியாவின் கவசங்கள்' பற்றிய கண்காட்சியைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"எங்கள் மொழியில் 'சமஸ்கிருதத்தின் செல்வாக்கில்லை' என்று தமிழறிஞர்கள் சொல்லலாம்; ஆனால் இந்திய நாகரிகத்தின் செல்வாக்கு அதில் சேர்ந்திருப்பதை அவர்கள் மறுக்க இயலாது" என்று, வரவேற்புரையில் எஸ்.கே. பாட்டில் கூறியதை மறுத்துக் குறிப்பிடுகையில்தான் திருமதி தாரா செரியன், தமிழின் பெருமை பற்றிச் சுட்டிக்காட்டினார்.

அண்ணாவின் பாதையில் தென்னக மாநிலங்கள்!

புதுடில்லிக்கு எதிராக ஆந்திர-கேரள முதலமைச்சர்கள் எதிர்ப்புக் குரல்!

பொருளாதாரத் துறையில் வட்டார ஏற்றத்தாழ்வு காண்பிப்பதாகக் குமுறல்

'மொழித் துறையில் ஏகாதிபத்திய உணர்வு' எனக் குற்றச்சாட்டு

['நம் நாடு' செய்தி நோக்கு]

'மத்திய - மாநில அதிகார உறவு முறைகளில், புதிய சிந்தனை தேவை' என்று வலியுறுத்திவரும் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து, இப்போது, கேரள—ஆந்திர முதலமைச்சர்களும் இதேவகையில் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

"மாநில அரசுக்குக் கூடுதலான அதிகாரங்கள்—கூடுதல் நிதியுதவி தேவை" என்ற கழக அமைச்சரவையின் உரிமைக் குரலை அரசியல் கண்கொண்டு நோக்குவோருக்குத் தக்க பதிலளிக்கும் வகையில், ஆந்திர மாநிலத்தின் காங்கிரசு அமைச்சரவை முதல்வர் பிரும்மானந்த ரெட்டி, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில், நிதி உதவும் பிரச்சினையில் புதுடில்லி, 'வட்டாரச் சலுகைகளை அடிப்படையாக வைத்து ஒதுக்கீடு செய்கிறது' எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

"மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் கடன்களின் வட்டி விகிதங்கள், அதே கடனை அளித்த வெளிநாடுகளுக்கு மத்திய அரசு செலுத்தும் வட்டி விகிதங்களைவிடப் பலமடங்கு அதிகமாக இருக்கிறது" எனக் குறிப்பிட்டுக் கண்டனமும் வருத்தமும் தெரிவித்துள்ளார்.

சென்ற ஆண்டில், கழக அமைச்சரவையின் முதல் நிதிநிலை அறிக்கையை அளித்து தமிழகச் சட்டமன்றத்தில் பேசிய முதலமைச்சர் அண்ணா அவர்கள், இங்குள்ள காங்கிரசுக்காரர்கள் கருத்தில் பதியும்படி இதே கருத்தை வலியுறுத்திப் பேசியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

"'சொந்த மாநிலம்' என்ற முறையில் மட்டுமல்லாமல், இந்தியாவின் மொத்த மாநிலங்கள் அனைத்துக்குமாக மத்திய அரசு ஒதுக்கும் நிதி வசதிகள் பற்றாக்குறையாகவே இருந்துவருகிறது" என்று பொதுப்படையாகப் பேசியிருக்கும் பிரும்மானந்த ரெட்டி, தனது குற்றச்சாட்டுக்கான புள்ளிவிவரத்தையும் தந்துள்ளார்.

"1968—69-ம் ஆண்டுக்கு மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்கும் நிதி ஒதுக்கீடு, ரூ. 590 கோடி; ஆனால் மாநிலங்கள், வரிகள் மூலம் மத்திய அரசுக்குப் பெற்றுத் தரவேண்டிய நிதியோ ரூ. 720 கோடியாகும்" எனக் கூறியிருக்கும் ஆந்திர முதலமைச்சர், 'மற்ற மாநிலங்களின் நிலைமையும் இதுதான்' என மனம் குமுறியிருக்கிறார்.

'பொருளாதாரத் துறையில் இருக்கும் வட்டார ஏற்றத்தாழ்வுகளே ஆங்காங்கே எதிர்ப்புக்களும், போராட்டங்களும் தோன்றுவதற்குக் காரணம்; புதுடில்லி, இத்துறையில் நடுநிலையோடு நடந்துகொள்ளுவதில்லை; இதை நான், கடந்த இரண்டு ஆண்டுகளாகவே எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகிறேன்; புதுடில்லி காதில்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

பகையை குறைக்க முயலுகிறேன்--- வளர்க்க முயலவேண்டாம்!

மக்கள் ஏற்படுத்திய ஆட்சி கண்டு ஆத்திரம் ஏன்?

ஆட்சிக் கவிழ்ப்புக்கென்றே காங்கிரசில் ஒரு தனி மரபை உருவாக்குவதா?

பொதுமக்களால் புறக்கணிக்கப்பட்டோர் போக்கு---முதலமைச்சர் அண்ணு விளக்க ஆய்வுரை

"திராவிட முன்னேற்றக் கழகம் அரசை ஏற்றுக்கொண்டதை இன்னமும் காங்கிரசுக் காரர்களாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை; நிமிடத்திற்கு நிமிடம் அந்த எண்ணத்திலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக்கொள்ள முடியவில்லை; அதற்குக் காரணம் இருக்கிறது.

"இந்த இருபது ஆண்டுகளாக இருக்கின்ற அரசியல் தொடர்பில் காங்கிரசுக் கட்சி அல்லது காங்கிரசுக் கட்சியில் உள்ளவர்களிடையே மதிப்பு வைத்து நாங்கள் பழகுகிறோம். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மதிப்பு வைத்து முன்னேற்றக் கழகத்தை அணுகிப் பழக்கமே இல்லை; துவக்கத்திலிருந்து, 'இது ஒரு கட்சியா' என்று விவாதித்துக்கொண்டிருந்தார்கள்; இது மழையிலே தோன்றிய காளானைப் போல் அழிந்துவிடும்' என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டார்கள்; 'அதற்குப் பொதுமக்கள் ஆதரவு வராது' என்று நம்பினார்கள்; அந்த நம்பிக்கையைப் பொதுமக்கள் முறியடித்த பிறகுகூட -- இப்பொழுதும்கூட அவர்கள், 'ஏமாற்று வித்தையினாலே ஆட்சிக்கு வந்துவிட்டார்கள்' என்றுதான் நினைக்கிறார்களே தவிர, 'அவர்கள் ஆளுவதற்கு இலாயக்கு உள்ளவர்கள்' என்று நினைக்கவில்லை! 'இன்னும் எத்தனை நாளைக்கு' என்ற பேச்சை நாங்கள் பதவியேற்ற நாளிலிருந்து அவர்கள் தங்களுடைய பேச்சின் முன்னுரையாகவே கொண்டிருக்கிறார்கள்!

"மார்ச் மாதம் 5-ந் தேதி அல்லது 6-ந் தேதி நாங்கள் பதவியேற்றோம் என்றால் அன்று முதல் அவர்கள், 'இன்னும் எத்தனை நாளைக்கு—இன்னும் எத்தனை நாளைக்கு?' என்றுதான் பேச்சை ஆரம்பிக்கிறார்கள்! திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதை, அவர்களாலே தாங்கிக்கொள்ள முடியவில்லை!"

இவ்வாறு முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், பிப். 20-ம் நாளன்று தமிழகச் சட்டமன்றத்தில், கவர்னர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் விளக்கிக் கூறினர் (அவரது உரையின் முழு விவரமும் தொடர்ந்து வெளியிடப்படும்); மேலும் அவர் விளக்கியதாவது :—

பகை ஒழிவதற்கா அன்றி வளருவதற்கா ?

"கவர்னர் அவர்களுடைய பேருரையின்பேரில் இந்த அவையினுடைய உறுப்பினர்கள் பலரும் தத்தமது கருத்துக்களை மிக விளக்கமாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

இறுதியாகப் பேசிய எதிர்க் கட்சித் தலைவர், சிறிதளவு ஆத்திரத்தோடு பேசினர்; அவருடைய ஆத்திரத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

இறுதியிலே அவர், 'திருக்குறள் நிலைக்கு நாடு வந்துவிட்டதா' என்று கேட்டு, 'பசி இருக்கிறது—பிணி இருக்கிறது—பகை இருக்கிறது' என்றெல்லாம் குறிப்பிட்டார்.

நம்முடைய நாட்டிலே பசி—பிணி—பகைமை இன்னமும் இருப்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்; அவர் குறிப்பிட்டபடி, பகை இருப்பது மட்டுமல்லாமல் அது இன்னும் கொழுந்துவிட்டெரிகின்ற அளவுக்குச் சென்றுகொண்டிருப்பதையும் நான் உணருகிறேன்; இங்கே பேசப்படுகின்ற பேச்சுக்களிலும் பகைமை குறைக்கப்பட வேண்டும் என்பதிலே நான் மிகுந்த கவலை கொண்டவனுகவும் இருக்கிறேன்.

எதிர்க் கட்சித் தலைவருடைய பேச்சு, 'பகைமையை ஒழிப்பதற்குப் பதிலாக பகையை வளர்ப்பதற்குத்தான்' பெரிதும் பயன்படுகிறது என்பதைச் சொல்வதற்கு நான் வருத்தப்படுகிறேன்.

ஒருமித்த கருத்தை உருவாக்க முனைவீர் !

பத்திரிகைச் செய்திகளிலே இருக்கின்ற தவறுகளாக இருந்தாலும், கூட்டங்களில் நடக்கின்ற கலவரங்களாக இருந்தாலும் அவற்றை நீக்குவதற்கும் போக்குவதற்கும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும், இதழ் ஆசிரியர்களும் ஒன்றுகூடி — ஒருமித்த கருத்துக்கு வந்து — 'என்னென்ன முறையிலே செய்திகளை வெளியிடுவது; கூட்டங்களை நடத்துகின்றபொழுது, 'என்னென்ன ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்' என்பதிலெல்லாம் அவர்கள் ஒத்த கருத்துக்கு வருவார்களானால், நான் மெத்தவும் போற்றி வரவேற்கிபேன்.

மதுரையில் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுகூடி சமரச ஏற்பாட்டுக்கு வந்ததாகப் பத்திரிகையில் பார்த்தேன்; அது எந்த அளவுக்கு வெற்றி பெற்றது என்பதைப் பற்றிய முழுத் தகவல் கிடைக்கவில்லை; அந்த முயற்சி வரவேற்கத்தகுந்த முயற்சி என்பதால் பாராட்டுகிறேன்.

அரசியல் கட்சித் தலைவர்களும் இதழாசிரியர்களும் பகையை வளர்ப்பதிலே நாட்டம் கொள்ளாமல் இருக்கக்கூடிய முறையில்—அப்படிப்பட்ட முயற்சியிலே எதிர்க் கட்சித் தலைவர் ஈடுபடுவாரானால் நான் அவருக்குத் துணை நிற்பேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'எப்படிக் கவிழ்ப்பது' என்ற நிலைக்கு வந்துவிட்டனர்!

மேற்கு வங்காளத்திலே காங்கிரசு அல்லாத அரசையும், பாஞ்சாலத்திலே காங்கிரசு அல்லாத அரசையும், வேறு சில இடங்களிலே காங்கிரசு அல்லாத அரசையும் வரைமுறையில்லாத வழிகளில் எல்லாம் சென்று கவிழ்க்க முயற்சி செய்ததற்குப் பிறகு—ஒரு புலி ஒரு முறை இரத்தத்தைக் குடித்துவிட்டால், அதை, 'புலி' என்று சொல்லாமல், 'மனிதனைக் கொல்லுகின்ற பிராணி' அல்லது, 'மேன் ஈட்டர்' என்ற நிலைக்கு வந்துவிட்டதாகச் சொல்லுகிறோம்—காங்கிரசு இல்லாத ஆட்சிகளையெல்லாம் கவிழ்த்துவிட்ட பிறகு, தமிழக அரசை எப்படிக் கவிழ்ப்பது என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது!

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் திரு. நிஜலிங்கப்பா அவர்களே காங்கிரசு மாநாட்டிலே வெளிப்படையாகப் பேசினர்கள்.........

திரு கே. விநயகம் :—" அப்படி இல்லை."

அண்ணு :—" திரு. விநயகம் அவர்கள் சொல்கிறார்கள்—'எனக்கு அப்படியில்லை' என்று; அவர் சொல்லுவதை நான் உணருகிறேன். அவருக்கு இருக்கிற பாதுகாப்பு, இந்த அரசு இருப்பதுதான்! இந்த அரசு இல்லாவிட்டால் காங்கிரசிலே அவருடைய இடம் என்ன என்பது எனக்குத் தெரியாது!

திரு. கே. விநயகம் :—" அது மாதிரி யாராவது ஒருவர் சொன்னால், 'அவர் அப்படிச் சொன்னார்—இப்படிச் சொன்னார்' என்றெல்லாம் ரசனைக்காகச் சொல்லலாம்; ஆனால் சென்னையைப் பொறுத்தவரையில், 'தமிழ் நாடு காங்கிரசுக் கமிட்டி, கவிழ்ப்பதற்கு முயற்சிக்கிறது' என்று ஆதாரபூர்வமாகச் சொல்லுவார்களா? 'அங்கே இருப்பவர்கள் எல்லாம் அப்படிச் சொல்லுகிறார்கள்' என்று காட்டுவதெல்லாம் பயனற்றது."

அண்ணு :—" நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்ட எங்களுக்கு, நண்பர் விநயகம் அகில இந்தியக் காங்கிரசிலே இருந்து விலகிக்கொள்வது ஆச்சரியமாக இருக்கிறது! நான் அந்த மனப்பான்மையைத்தான் விளக்கினேன். அந்த மனப்பான்மைதான், பகையை வளர்ப்பதற்குக் காரணமாக இருக்கிறது; பகையை மூட்டிவிடுவதற்காக எந்த நடவடிக்கையையும் நாங்கள் எடுக்கவில்லை.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததைத் தாங்கிக்கொள்ள முடியாததால்தான், எடுத்ததற்கெல்லாம் இந்த ஆட்சியைப் பற்றியும், ஆட்சியினிடத்திலேயும் பகையுணர்ச்சி உங்களுக்கு இருக்கிறது!

கேவலமான முறையிலா காங்கிரசு செயல்படுவது ?

'இந்த ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு நாங்கள் சதி செய்தோமா' என்று பேசினார்கள் நாங்கள் 138 பேர்சளாக இல்லாமல் ஐந்தாறு ஓட்டு வித்தியாசத்தில் தோற்பவர்களாக இருந்திருந்தால், 'எனனென்ன செய்திருப்பீர்கள்' என்பதை யூகித்துக் கொள்ள முடியும்; 'என்னென்ன நடைபெற்றிருக்கிறது' என்பதும் தெரியும்.

'திருத்தத்தில்கூடக் கூட்டுச் சேர மாட்டோம்' என்று சொன்ன அகில இந்தியக் காங்கிரசுக் கட்சி, 17 பேர்கள் கொண்ட ஒரு கட்சியை அரசாளவிட்டு அவர்களுக்குத் துணை செல்வதைப்போல், காங்கிரசுக் கட்சிக்கு ஒரு கேவலமான நிலைமை இருக்கமுடியாது என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும்!

'17 பேர்கள் எங்களை ஆதரிக்கிறார்களா' என்று கேட்பதற்கு இல்லாமல், '17 பேர் ஆளுங்கள்; நாங்கள் பக்கத்துணையாகச் செல்கிறோம்' என்று இருப்பது, பத்மினி நடனத்திற்கு புலி வேடக்காரன் தாளம் போடுவதற்கு ஒத்ததாகத்தான் இருக்கும்!

கே. விநயகம் :—" இந்த அவையில் ஆளுநர் நிகழ்த்திய உரை பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். வெளி மாநிலத்தில் இயங்காத ஒரு கட்சியால் நடத்தப்படும் இந்த ஆட்சி, மேற்கு வங்கத்திலும் பஞ்சாபிலும் உள்ள அரசுகளைப் பற்றி விமர்சிப்பது முறையா? இந்த முறையில் குற்றஞ்சாட்டலாமா? தலைவர் இதற்குத் தீர்ப்பளிக்கவேண்டும்; முதலமைச்சரின் விளக்கம் எனக்குத் தேவையில்லை; இது மிகவும் அநீதியும் முறையற்றதுமாகும்."

பேரவைத் துணைத் தலைவர் :—" இங்கே இருக்கின்ற கட்சிக்கும்—அங்கே இருக்கின்ற கட்சிக்கும் ஒத்தத் தொடர்பு இருக்கின்ற காரணத்தால் கட்சி அளவில் பேசப்படுகின்ற நிலையில், அகில இந்தியக் காங்கிரசுக் கட்சியைப் பற்றிப் பேசுவது முறையானதுதான்."

கே. விநயகம் :—" மேற்கு வங்கத்தில் இயங்கும் அரசு சட்டபூர்வமானது என்று மேற்கு வங்க உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது தெரியுமா? அந்தத் தீர்ப்புக்கு எதிராக நாம் நடந்துகொள்ளப் போகிறோமா?"

அண்ணு :—" மாண்புமிகு உறுப்பினர் எப்படி வேண்டுமானாலும் கருதிக்கொள்ள உரிமை இருக்கிறது. நான் ஆட்சியில் உள்ள கட்சிகளைப் பற்றித்தான் பேசுகிறேனே தவிர, அரசுகளைப் பற்றியல்ல!

காங்கிரசின் மரபு செயல்படும் இலட்சணம்!

நான் எடுத்துச் சொல்லி வந்ததெல்லாம், 'காங்கிரசு அல்லாத அரசுகளை எப்படியாவது கவிழ்க்கலாம்' என்பதிலே காங்கிரசுக் கட்சிக்குள்ள விருப்பத்தைக் குறிப்பிட சில உதாரணங்களைச் சொன்னேன். அதைப் பற்றிச் சொல்லும்போது, காங்கிரசுக் கட்சி உறுப்பினராக இருக்கும் திரு. விநயகம் அவர்களுக்குக் கொஞ்சம் வெட்கமாக இருக்கிறது; அதற்குக் காரணம், அவர் இன்னும் காங்கிரசிலே அதிகமாக ஈடுபடாததன் காரணமாக அந்த உணர்ச்சி கொஞ்சம் இருக்கிறது என்று கருதுகிறேன்.

17 பேரைக் கொண்ட ஒரு கட்சியைக் கூப்பிட்டு, 'நீங்கள் அரசு அமையுங்கள்; நாங்கள் அதைப் பார்த்துக் கொள்கிறோம்' என்று சொல்லுவது ஒரு கட்சியின் இலக்கணத்திற்கோ, அரசியலுக்கோ ஒத்ததாக எங்களுக்குத் தெரியவில்லை என்றாலும், அது காங்கிரசின் மரபுக்கு ஒத்ததாக இருக்கிறது.

ஏனென்றால், கேரளத்தில் பட்டம் தாணுப்பிள்ளை இடத்தில் குறைவான எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் இருந்த நேரத்தில், 'நீங்கள் முதலமைச்சராக இருங்கள்; நாங்கள் வெறும் அமைச்சர்களாக இருக்கிறோம்; நம்பூதிரிபாடு அமைச்சரவை இல்லாமல் இருந்தால் அதுவே போதும்' என்று சொன்ன மரபு அவர்களுக்கு இருக்கிறது.

நான், 'மரபு' என்றுநான் குறிப்பிட்டேனே தவிர, அது, 'சரியான மரபா — சரியல்லாத மரபா' என்று சொல்லவில்லை!

அந்த மரபின்படி, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாததால்தான், இந்தப் பகை உணர்ச்சியெல்லாம் வருகிறது என்பதை முதலில் குறிப்பிட விருப்புகிறேன்.

இந்தப் பகை உணர்ச்சியை நீக்குவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னவிதமான யோசனைகளை மேற்கொள்வதாக இருந்தாலும் அதற்கு நண்பனுக நானும் பக்கத்திலே இருப்பதை அவர்கள் பார்க்கமுடியும் என்ற உறுதியை அளிக்க விரும்புகிறேன்.

தோல்வியை மறைப்பதற்கா பிரச்சினையைக் கிளப்புவது?

"'ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையைப் புறக்கணித்ததன் விளைவாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டது என்று கவர்னர் அவர்கள் தம்முடைய உரையிலே குறிப்பிட்டிருப்பது சரியானது அல்ல; நாங்கள் வேளாண்மைத் துறையிலே இன்னின்ன அளவுக்கு வெற்றி கண்டிருக்கிறோம்' என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

ஒரு பிரச்சினையிலே, 'வெற்றியா, தோல்வியா' என்று பார்ப்பதற்கு மூன்று அம்சங்கள் இருக்க வேண்டும்—அதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி; அதற்காகச் செலவழிக்கப்பட்ட பணம்; அதைக்கொண்டு எதிர்பார்க்கப்பட்ட எதிர்பார்ப்புக்கள்;—இந்த மூன்றுக்கும் ஒத்து வந்தால்தான், 'வெற்றி' என்று கூற முடியும்; அல்லது, 'தோல்வி' என்று கூற முடியும்.

எத்தன்போல் எவரும் சொல்லுவதுமுறையா?

நான்கு பேர் சேர்ந்து ஓட்டப் பந்தயத்திற்குப் போகின்றபோது அதிலே கலக்காத ஒருவன், எல்லாம் முடிந்த பிறகு, 'நானும்தான் ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றேன்' என்று சொல்வதைப்போல் நீங்கள், 'விவசாயத்தில் வெற்றி பெற்றுவிட்டோம்' என்று சொல்லுவதும் இருக்கிறது!

ஆய்வாளர்கள் — ஒவ்வொருவரும்—பொருளாதார வல்லுநர்கள் ஒவ்வொருவரும்,

(3-ம் பக்கம் பார்க்க)

வேளாண்மைத் துறையில் வெற்றிபெறவில்லை என்பது தவறு?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தாண்டுத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்பட்ட பணம்—அதற்காகத் தீட்டப்பட்ட திட்டங்கள்—அதை நிறைவேற்றிய முறைகள் ஆகியவற்றைக் கணக்கெடுத்துப் பார்க்கின்றபோது, 'ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையில் தோல்வி ஏற்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; அதைத்தான் இங்கே கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களே தவிர, 'ஐந்தாண்டுத் திட்டங்களில் எதுவுமே நடைபெறவில்லை' என்று கூறவில்லை.

சவலை போன்ற வளர்ச்சியையா வெற்றி எனக்கூறுவது?

சவலைக் குழந்தைக்கும்—திடகாத்திரமான குழந்தைக்குமிடையே வித்தியாசம் பார்ப்பதற்கு முன்னால், 'எத்தனை மாதக் குழந்தை' என்று கேட்டு—'பத்து மாதக் குழந்தை' என்று பதில் சொல்லிய பிறகு—'10 மாதக் குழந்தைக்கு உள்ள வளர்ச்சி இல்லையே; இது சவலைக் குழந்தையாக இருக்கிறதே' என்று கூறுவது உலக வாடிக்கை! 'முன்பு சுட்டுவிரல் $1\frac{1}{4}$ அங்குலம் இருந்தது; இப்போது $1\frac{3}{4}$ அங்குலம் இருக்கிறது; அவயவத்திலேயே நாணயமான அவயவத்தைக்—குறிப்பிட்டேன்'—என்ற முறையில் விவசாயம் வெற்றி பெற்றிருக்கிறது!

'வளர்ந்திருக்கிறது' என்று சொல்வது தங்களுடைய தோல்வியை மறைப்பதற்காகத்தான்! இதைப்பற்றிக் கவர்னர், தமது உரையிலே சொன்னதைப் பற்றிக்கூட, 'நாங்கள் சொல்லி, கவர்னர் குறிப்பிட்டிருக்கிறார்' என்ற அரசியல் பிரச்சினையைக் கிளப்பினார்கள்.

சொன்னதைத்தான் சொல்லுகிறோம்--- ஏனோ ஆத்திரம்?

அட்படியே வைத்துக்கொண்டாலும்கூட, முன்னாலே அகில இந்திய காங்கிரசுக் கமிட்டியின் தலைவராக இருந்த திரு. சஞ்சீவையா அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றிக் கொடுத்திருக்கிற விமரிசனங்களைப் படித்துப் பார்க்க வேண்டும்; 'வெகு தொலைவில் உள்ளவர் கூறியதைப் படித்துப் பார்க்கமாட்டோம்' என்று கூறினால், அவருக்கும் எனக்கும் மிக நெருங்கிய நண்பரான திரு. சுப்பிரமணியம் அவர்கள், 'ஐந்தாண்டுத் திட்டத்தால் ஏற்பட்ட பலன்கள் ஏழை மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்ற கோபத்திலேதான் காங்கிரசைத் தோற்கடித்துவிட்டிருக்கிறார்கள்' என்று சில திங்களுக்கு முன்னால் கோவையில் பேசியதன் பொருளை மறந்துவிடமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

ஆகவே, ஐந்தாண்டுத் திட்டங்களினால் வேளாண்மைத் துறை சரியான அளவு முன்னேறவில்லை' என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டாகிவிட்டது; அதை நாங்கள் எடுத்துச்சொல்வதால், நண்பருக்கு ஆத்திரம் வருகிறது.

சில மனைவிமார்கள் பற்றிக் கதை சொல்வார்கள்—'அவர் அடித்தது அவ்வளவாக வலிக்கவில்லை; அண்டை வீட்டுக்காரன் சிரித்தானே -- அதுதான் தாங்கமுடியவில்லை' என்பதைப் போன்றதுதான், 'ஐந்தாண்டுத் திட்டங்களால் வேளாண்மைத் துறை வெற்றி பெற முடியவில்லை' என்பது! ஆனால் இதை அண்ணாதுரை சொல்கிறபோது, 'ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது' என்ற கதைப் போக்கில் பேசுகிறார்களே தவிர, அவர்களுக்கே அது தெரியும்....

வ. ஜார்ஜ் :—" அவைத் தலைவர் அவர்களே! இதற்கு முன்னால் ஆற்றிய ஆளுநர் உரையிலே இவ்வாறு கூறவில்லை; 'ஓரளவு விவசாயத் துறை வெற்றிகரமாக இருக்கிறது; முந்திய சர்க்கார் நல்ல முறையில் பணியாற்றியது என்று கூறிவிட்டு....

பேரவைத் துணைத் தலைவர் :—"இது, பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல."

வ. ஜார்ஜ் :—" முன்னாலே நிகழ்த்திய கவர்னர் உரையிலே இதைப் பற்றிக் குறிப்பிடாமல், இப்போது குறிப்பிடுவதற்கு என்ன காரணம் என்பதை முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும்."

அண்ணா :—" எடுத்த எடுப்பிலேயே கோபப்படுத்த வேண்டாமென்று போன தடவை சொல்லாமல் இருந்திருக்கலாம். கட்சிகளை மறந்து இதைப் பற்றிச் சற்று ஆராயவேண்டும். 'ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைத் துறையில் போதுமான வெற்றி பெறவில்லை' என்பது, இந்தியா முழுவதும்—வெளிநாடுகளிலும் நிபுணர்களின் கருத்தாகும்; அதைத்தான் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்."

உரிமைக்கு உறைவிடம் எதுவெனத் தெரியுமா?

'ஏ.டி.டி, 27 எது தெரியுமா? நண்பர் சுப்பிரமணியம் கொண்டுவந்தது' என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். 'சுப்பிரமணியம் அவர்கள் என்னுடைய நண்பர்' என்று சொல்லக்கூடிய உரிமை எனக்குக்கூட இருக்கிறது; 'அது அவர் கண்டுபிடித்தது' என்று பெருமையோடு சொல்வார்களானால் நானும்கூட வரவேற்பேன்.

1950-ம் ஆண்டு எப்.ஏ.ஓ.-வின் உலக நாடுகள் அவையில் விவசாயப் பிரிவுக்காக ஏற்படுத்திய இடத்தில், 'போகூர்' என்ற இடத்தில் முதன் முதலாக மாநாடு கூடி புதிய ரக நெல் விதைகளைத் தயாரிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு—இரண்டாவதாக ஜாகர்தாவில் கூடிப் பேசப்பட்டு—அதற்கு அடுத்த ஆண்டில் பாங்காக்கில் கூடி அங்கும் பேசப்பட்டு—அதை நிறைவேற்றிக் கொடுக்கிற பொறுப்பு ஆடுதுறைக்கு அளிக்கப்பட்டது.

இதற்குப் பாத்தியதை கொண்டாட வேண்டுமென்று சொன்னால், நண்பர் கருத்திருமன் அவர்கள் வெகு தொலைவு போக வேண்டும்.

நண்பர் சுப்பிரமணியம்தான் கண்டுபிடித்ததாகச் சொன்னாலும்—நம்முடைய தமிழ்நாட்டிலே ஒரு பழமொழி உண்டு; 'பெற்றவர்களைக் காட்டிலும் வளர்த்தவர்களுக்குத்தான் பெருமை அதிகம் கிடைக்கும்; பெற்றுப் போட்டுவிடலாம்; வளர்ப்பதிலேதான் பெருமை இருக்கிறது' என்று—அதுபோல், நாங்கள் அதை நல்ல முறையில் வளர்த்திருக்கிறோம் என்ற முறையில் நண்பர் அவர்கள பாராட்டுவார்கள் என்று கருது கருதுகிறேன்.

புறக்கணிக்கவில்லை -- ஆராய்கிறோம்!

மற்றும் ஒன்றைச் சொல்லுகின்றபோது அவர், 'நான் கொள்முதலுக்கு விரோதி அல்ல' என்று குறிப்பிட்டார்; அதை நான் மிகவும் பாராட்டுவதோடு வரவேற்கிறேன்.

'கொள்முதலுக்கு விரோதி அல்ல' என்பது மட்டுமல்லாமல், 'கொள்முதலை எப்படி இலகுவாகச் செய்யலாம்' என்பது பற்றியும் பலமுறை யோசனை சொல்லிக்கொண்டு வருகிறார்கள். அந்த யோசனைகளைப் பற்றி அதிகாரிகளிடத்தில் கலந்து பேசுகின்றபோது, அதை அவர்கள், 'சரியானது' என்று ஒத்துக்கொள்ளாததால் விவாத நிலையில் இருக்கிறதே தவிர, அவர் சொல்லுகின்ற யோசனைகள் புறக்கணிக்கப்பட்டுவிட்டன என்று மனத்தாங்கல் கொள்ளத் தேவையில்லை; இன்னும் ஆராய்ந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

தவறான பழமொழி தழைப்பது முறையன்று!

இன்னொன்றும் அவர் சொன்னார்—'நீங்கள் நெல் விலையை அதிகப்படுத்துங்கள்; நான் மத்திய அரசை ஒரு கை பார்க்கிறேன்' என்று!

'ஒரு கை பார்க்கிறேன்—ஒரு கை பார்க்கிறேன்' என்பது, தமிழகத்தில் தவறாக வந்துவிட்ட ஒரு பழமொழி. இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு பார்க்கலாமே! ஒரு கை ஒரு காரியத்திற்கும், மற்றொரு கை இன்னொரு காரியத்திற்கும் என்று இருக்கத் தேவையில்லை!

மத்திய அரசு இதுபற்றி ஆராய்ந்து பார்த்து அவர்கள் கொடுத்திருக்கின்ற காரணத்தைத்தான் நாங்கள் ஆதாரமாக வைத்துக்கொண்டிருக்கிறோமே தவிர, 'அதையொட்டித்தான் நாங்கள் நடந்துகொள்கிறோம்' என்று நான் சொல்லவில்லை.

எங்களுக்குத் தெரிந்த நியாயத்தை ஏற்கின்றனரே!

புது ரக நெல் வந்திருப்பதை எதிர்க் கட்சித் தலைவர் ஒத்துக் கொண்டபிறகு—அந்தப் புது நெல்லால் விளைச்சல் அதிகமாகிறது என்பதை ஒத்துக் கொண்டபிறகு—ஒரு குறிப்பிட்ட அளவு நிலத்தில் அதிக நெல் கிடைக்கும்போது—ஒரு ஏக்கர் நிலத்தில் கிடைக்கக் கூடிய வருவாய் இயற்கையாகவே அதிரித்திருக்கும்போது—அதிக விலைகூடக் கொடுக்காமல் அவர்களுக்கு ஆதாயம் அதிகமாகிறது என்பது சாதாரண கணக்கு. அப்படியிருப்பதில், போனசு மூன்று ரூபாய் விலையோடுகூட கூட்டி 48 ரூபாய் அளவிற்கு இன்றையத் தினம் கொடுத்துக்கொண்டுவருகிறார்கள்.

ஆகவே, கொள்முதல் விலையை அதிகப்படுத்தத் தேவையில்லை என்பதற்கு எங்களுக்குத் தெரிந்த நியாயமும் இருக்கிறது; அந்த நியாயத்தை ஆதரிக்கும் முறையில் மத்திய அரசிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மத்திய அரசு சொன்னது மட்டுமல்ல—திட்டக் குழுத் தலைவர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, 'கொள்முதல் விலையை அதிகப்படுத்தவில்லை — அதிகப்படுத்தவில்லை' என்ற பேச்சை எவ்வளவுக்கெவ்வளவு குறைத்துக்கொள்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது என்று கருதுகிறேன்.

நெருக்கடிக்கு விதை விதைக்கின்றனர்

இன்னொரு வகையில் பார்த்தால், இவர்கள், 'நெல்லுக்கு அதிக விலை வாங்கிக் கொடுக்க வேண்டும்' என்ற நல்லெண்ணத்தோடுகூடப் பேசுவதாகத் தெரியவில்லை. எப்படியாவது இந்த அரசுக்கு ஒரு பொருளாதார நெருக்கடியை உண்டாக்கலாமா என்பதுதான்!

அதனால்தான் அவர்கள், ரூபாய்க்கு ஒரு படி அரிசி இங்கு மட்டும் போடுகிறீர்களே—மற்ற இடங்களுக்கு ஏன் போடவில்லை; எல்லா இடங்களுக்கும் போடுங்கள்' என்று கூறி, "நெல்லுக்கு அதிக விலை கொடுத்து வாங்குங்கள்—அதிக விலை வாங்கி எல்லா இடங்களுக்கும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டு வரவு-செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியாமல் நீங்கள் திண்டாடுங்கள் — அதை நாங்கள் வேடிக்கை பார்க்கிறோம்—வேடிக்கை பார்த்து மத்திய அரசிடம், 'இவர்களுக்கு வரவு - செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியவில்லை; ஆகவே திண்டாடுகிறார்கள்' என்று எடுத்துச்சொல்ல—அதற்கு ஏதாவது இந்திய அரசியல் சட்டத்தில் ஒரு வழி இருக்குமானால் — அவர்களை நீக்க முயற்சிக்கிறோம்" என்று, அந்தப் பழைய இடத்திற்குத்தான் போகிறார்கள்!

நாங்கள் விலகினாலும் நிம்மதி ஏற்படுமா?

நான்கூட வேடிக்கையாகச் செய்வதானால், இப்போது எல்லா இடங்களிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று உத்தரவு இட்டுவிட்டு — இருக்கிற அரிசியை எல்லா இடங்களுக்கும் அளந்து போடச் சொல்லி—ஒரு மூன்று மாத காலத்தில், 'வரவு - செலவுத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியாது' என்பதைச் சொல்லிவிட்டு — 'நாங்கள் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறோம்' என்று சொல்லிவிடுவேனானால், அடுத்த ஆறு மாதங்களுக்கு வேண்டுமானால் உங்களுக்கு சற்று நிம்மதியிருக்கலாம்—குடியரசுத் தலைவர் ஆட்சி இருக்கிறபோது!

ஆனால் மறுபடியும் பொதுமக்களிடம் போகிறபோது, இதைத்தான் உங்களிடம் கேட்பார்கள்—'அண்ணாதுரை விலகுவதற்கு முன்னால் ரூபாய்க்குப் படி அரிசி என்று எல்லா இடத்திற்கும் போட்டானே—நீங்கள் போடுவீர்களா — போடமாட்டீர்கள்; ஆகவே, அப்படிப் போடாத உங்களுக்கு நாங்கள் ஏன் ஓட்டு போடவேண்டும்' என்றுதான் சொல்லிவிடுவார்கள்!

மீண்டும் ஆட்சிக்கு வர வழிவிடமாட்டோம்!

ஒன்றை உங்களிடம் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்—'மக்களுக்கு நன்மை செய்ய முடியாது' என்று திட்டவட்டமாக எனக்குத் தெரிந்தால், தெரிந்த மறுகணமே நான் ஆட்சிப் பொறுப்பில் இருக்கமாட்டேன்!

அப்படி ஆட்சிப் பொறுப்பில் நான் இல்லாத நேரத்தில் மறுபடியும் நீங்கள் வெகு சுலபத்தில் உள்ளே வருகிறபடி வழியை வைத்துவிடுவேன் என்று நீங்கள் கருத வேண்டாம்!

நான் விலகிவிட்டால் நீங்கள் உடனே வந்துவிடலாம் என்ற எண்ணத்தை வைத்துக்கொண்டு இந்தக் காரியத்தில் ஈடுபட வேண்டாம்!

சனநாயகத்திற்கு ஏற்படும் நட்டம் அது!

'இந்த ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று நாங்கள் சதி செய்திருக்கிறோமா' என்று விநாயகம் அவர்கள் கேட்டார்கள்.

சதி என்றால் வெளியே தெரியாது! இதில் சதியே தேவை இல்லை! நீங்கள் பேசுவதிலிருந்தே, அது உங்களது எண்ணமாக இருக்கிறது—திட்டமாக இருக்கிறது என்பது தெரிகிறது! அதில் நட்டமடையக் கூடியவர்கள் நிச்சயமாக நாங்கள் அல்லர்—நட்டமடையக் கூடியவர்கள் இந்த நாட்டு மக்களாக இருப்பார்கள்; அல்லது சனநாயகமாக இருக்குமே தவிர, நாங்களாக இருக்கமாட்டோம்! என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு இந்தச் சட்டமன்றத்தில் நான் பேசுகிறபோது, ஒவ்வொரு நாளும், 'இதுதான் கடைசிப் பேச்சாக இருக்கலாம்' என்ற எண்ணத்தோடுதான் நான் பேசிக்கொண்டு வருகிறேனே தவிர, அப்படியே குச்சி அடித்து இங்கேயே உட்கார்ந்து இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அல்ல என்பதை—'இவர்களைக் கவிழ்க்கலாமா? இந்த அரசை நீக்கலாமா?' என்ற எண்ணம் கொண்டுள்ளவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உண்மையை மறைத்துப் பேசுவதால் பயனென்ன-- இதோ ஒரு சான்று!

'வேளாண்மைத் துறையில் இவர்கள் ஒன்றும் செய்யவில்லை' என்பது மட்டுமல்ல—'நாங்கள் எவ்வளவோ தொழிற்சாலைகளை ஆரம்பித்து வைத்தோம்; இவர்கள் வந்து தொழிற்சாலைகளை எல்லாம் மூடிவிட்டார்கள்' என்று சொன்னார்கள்.

இந்தப் பொதுத் தேர்தலுக்குப் பிறகு நடைபெற்றுக் கொண்டு வருகிற காங்கிரசு ஆட்சியில் என்னென்ன புதுத் தொழில்கள் எந்தெந்த அரசால் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நம்மோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, 'நாம் மகிழ்ச்சியடையக் காரணம் இருக்கிறதா அல்லது வெட்கப்படக் காரணம் இருக்கிறதா' என்று தெரிந்து கொள்வதற்காகச் சில புள்ளி விவரங்களைக் கேட்டேன்.

ஆந்திராவில் காங்கிரசு அரசாளுகிறது —அங்கு 1967 மார்ச்சிலிருந்து செப்டம்பர் வரையில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லைசென்சு தரப்பட்டிருக்கிற தொழில்கள் 6; ஆரம்பிப்பதற்காக வந்திருக்கிற கடிதங்கள் 2!

மைசூரில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லைசென்சு கொடுத்திருக்கிற தொழில்கள் 5; கடிதம் வந்திருப்பது 2!

சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்படுவதற்காக லைசென்சு கொடுக்கப்பட்ட தொழில்கள் 10; 'புதிதாகத் தேவை' என்று கடிதங்கள் வந்திருப்பது 6!

ஆகவே, நாங்கள் வந்தபிறகு, 'தொழில்கள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன' என்று சொல்வது உண்மைக்கு மாறானது என்பது மட்டுமல்ல — காங்கிரசு அரசாளும் இடங்களைவிட ஒரு படி அதிகமாக இங்கு தொழில்கள் வளர்ந்திருக்கிறதே தவிர, குறையவில்லை!

அன்றைய ஆட்சியில் நடந்தது அது-- இன்றைய ஆட்சியில் நடப்பது இது!

பல இடங்களில் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டதாக அவர்கள் சொல்லுகிறார்கள்; பிப்ரவரி—மார்ச் கணக்கில் வைத்துப் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். கடைசியாக திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கோயம்புத்தூரில் பல ஆலைகள் மூடப்பட்டு—பல ஆலைகள் மூடப்பட்ட நிலையில்—அவர்களை அணுகி மில் முதலாளிகளும் ஆலைத் தொழிலாளர்களும், இதைத் திறக்க வேண்டுமென்று கேட்ட நேரத்தில், 'ஆலை முதலாளிகள் மூடிவிட்டதற்கு நான் எப்படி

(4-ம் பக்கம் பார்க்க)

சட்டத்தில்இடமில்லை---சமரசம் உருவாக வழிகோலினேம்!

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பொறுப்பாவேன்? நான் அதைத் திறப்பதற்கில்லை' என்று சுருக்கமான பதிலை முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

நான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தபிறகு ஆலை முதலாளிகள்—ஆலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்கள்—தொழிலாளர்களின் தலைவர்கள்—பொருளாதார நிபுணர்கள் இவர்களைக் கொண்ட ஒரு முக்கூட்டு மாநாடு கூட்டி, அந்த முக்கூட்டு மாநாட்டில், 'ஏன் இந்த ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன' என்பதைக் கண்டறியும்படி பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்களைக் கேட்டுக்கொண்டு அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டதற்கிணங்க—'ஆலைகளுக்கு அரசினர் உத்தரவாதம் கொடுத்து பாங்கியில் கடன் கொடுப்பார்களானல், அந்த ஆலைகள் மறுபடியும் திறக்கப்படலாம்' என்று அந்நிபுணர் பரிந்துரை தந்ததையொட்டி — இதுவரையில் 18 ஆலைகள் அவருடைய பரிந்துரையின்படி திறக்கப்பட்டு வேலை நடந்துகொண்டிருக்கின்றன.

ஒப்பந்தத்தின் உண்மை நிலை என்ன?

கருத்திருமன் அவர்கள், 'நீங்கள் கோயம்புத்தூருக்குப் போய் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்டு வந்தீர்களே' என்று சொன்னார்கள். வார்த்தைக்கு வார்த்தை உண்மையானதாக இருக்க வேண்டுமென்பதற்காக அதைத் திருத்துகிறேன். அந்த ஒப்பந்தம் கோயம்புத்தூரில் போய் செய்ததல்ல; அந்த ஒப்பந்தம் செய்யப்பட்ட இடம் சென்னை; இன்னும் சொல்ல வேண்டுமென்ருல், திருச்சி.

திருச்சியில்கூட ஒப்பந்தம் செய்யப்பட்டதென்ருல், ஆலை முதலாளிகள் ஒரு பக்கத்திலும்—ஆலைத் தொழிலாளர்கள் ஒரு பக்கத்திலும்—நான் ஒரு பக்கத்திலும் என்று அல்ல; ஒரு பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது; அப்போது நான் குற்ருலத்தில் இருந்தேன்; அங்கிருந்து திரும்பி நான் சென்னைக்கு வருகிற வழியில் திருச்சியில் தங்கியிருந்து, தொழிலாளர்கள் தலைவர்களை எல்லாம் திருச்சிக்கு வரவேண்டுமென்று அன்போடு அழைத்திருந்தேன்; அவர்களும் பெருந்தன்மையோடு திருச்சிக்கு வந்திருந்தார்கள்; அவர்களிடம் கலந்து பேசியபோது, 'ஓர் ஆலை மூடப்பட்டுப் போய்விட்டால் அதை எடுத்துக்கொள்வதற்கு சட்டத்தில் இடமிருக்கிறதா?' என்று அவர்களிடத்தில் விவாதித்தேன்.

நமக்கு, சட்டத்தில் அதற்கு இடமில்லை. ஓர் ஆலை மூடப்பட்டுப் போகிறது என்ருல், ஒன்று—அதை, 'லிக்விடேஷ'னுக்குக் கொண்டுவரலாம்; அதை ஏலத்திற்குக் கொண்டுவரலாம். அரசினரே ஏற்றுக் கொள்வதாக இருந்தால், முதலில் மத்திய அரசிடம் தெரிவித்து — மத்திய அரசு ஒரு 'கமிஷன்' போட்டு—அந்தக் 'கமிஷன்' விசாரணை செய்து—அந்த விசாரணைக்குப் பிறகுதான், 'அந்த ஆலையை எடுத்துக் கொள்ளலாமா வேண்டாமா' என்று முடிவுகட்ட முடியும்.

இதை எதிர்க் கட்சித் தலைவர் உணர்ந்துகொள்ளாமல், நான் ஏதோ ஒப்பந்தம் செய்துவிட்டதாகக் குறிப்பிட்டார்கள்.

மத்திய அரசுக்கு இதில் குறுக்கிடுவதற்கு உரிமை இருக்கிறது; அவர்களுக்குத்தான் வலிமை இருக்கிறது; அவர்களுக்குத்தான் பொறுப்பு இருக்கிறது!

ஆனல், இடையிலே தொழிலாளர்கள்—ஆலைகள் மூடப்படுவதால் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிருர்கள் என்பதனல், 'அவர்களுக்கு ஏதாவது உதவி தர வேண்டாமா? ஏதாவது காப்பாற்றல் வேண்டாமா?' என்று பேசிப் பார்க்கிற நேரத்தில், நிச்சயமாக சட்டத்தில் அதற்கு இடமில்லை என்ருலும், 'வேலையற்ருேருக்கான இன்சூரன்சு என்ற சட்டமோ அல்லது வேலை இழந்தோருக்கு போனசு—பணம் தருவது என்ற சட்டமோ நம்மிடம் இல்லாத காரணத்தால், வேறு ஏதாவது வகையில் இதற்கு வழிசெய்ய முடியுமா என்று நான் ஆராய்ந்து பார்க்கிறேன்' என்று அவர்களிடம் சொல்லி—அதுவும், 'தொழிற் சங்கத் தலைவர்களோடு கலந்து பேசி ஒரு முடிவிற்கு வரலாம்' என்று நான் குறிப்பிட்டு—தொழிற் சங்கத் தலைவர்கள் எல்லாம் இங்கு கூடி அது பற்றிப் பேசிய நேரத்தில், மூன்று வகையாக நாங்கள் திட்டமிட்டோம்.

ஒன்று — மூடப்பட்டிருக்கின்ற ஆலைகள் மறுபடியும் திறக்கப்படுவதற்கு முழு முயற்சி எடுத்துக் கொள்ளுவது; இரண்டாவது—சில ஆலைகள் திறக்கப்படவே முடியாமற் போனல், வேலையிழந்தவர்களுக்குத் திறந்திருக்கிற ஆலைகளில் மாற்று வேலை கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்வது; திறந்திருக்கிற ஆலைகளில் வேலை கொடுக்க முடியாமற் போனல், வேறு ஏதாகிலும் தொழிலில் அவர்களை ஈடுபடுத்துவது; வேறு எதிலும் ஈடுபடுத்த முடியவில்லை என்ருல், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு ஆலை முதலாளிகள்—ஆலைத் தொழிலாளர்கள்—பொது மக்கள்—அரசு ஆகியோர் எல்லாம் சேர்ந்து நிதி திரட்டுவது—இந்த முறையில்தான் அந்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

அதன்படி, முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ 2 இலட்சம் நிதி தரப்பட்டது. நாங்கள் ரூ. 2 இலட்சம் தருவதற்கு முன்னலே, கோவையில் உள்ள—வேலையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் ஒரு ஞாயிற்றுக்கிழமை வேலைசெய்து ரூ. 2 இலட்சத்திற்குமேல் நிதி திரட்டி—இரண்டையும் சேர்த்துப் பங்கிட்டுக் தரப்பட்டது. இதுதான் எங்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தம்.

'கோயம்புத்தூருக்குப் போய் ஒப்பந்தம் செய்துவிட்டு வந்துவிட்டாய்; ஆனல் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை' என்று எதிர்க் கட்சித் தலைவர் சொன்னர்; இதிலே, ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்ற அளவுக்குத் தொழிலாளர்களிடம் எங்களுக்கு நல்லெண்ணம் இருப்பதை அவர்கள் பாராட்ட வேண்டுமென்று கருதுகிறேன்.

அவர்களது அரசு இருந்த காலத்தில், 'ஆலை முதலாளிகள் மூடிவிட்டால் நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர்' என்று கைகழுவிவிட்டது போல் நாங்கள் கைகழுவவில்லை என்பதால் அதைப் பெருந்தன்மையோடு அவர்கள் பாராட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

அப்படிப்பட்ட நிவாரண வேலைகளில் ஒரு கட்சிக்கோ அல்லது ஒரு கட்சியினுல் நடத்தப்படுகிற அரசுக்கோ அல்லாமல், எல்லோருக்கும் பங்கு இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஆகையினல், 'தொழில்களெல்லாம் மூடப்பட்டுக் கிடக்கின்றன' என்று சொல்லுவது பொருத்தமானதல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"வேளாண்மைத் துறையும், தொழில் துறையும் இந்த முறையில் தீர்க்கப்பட்டான பிறகு, மீதம் இருக்கிற மிக முக்கிய பிரச்சினை, மொழிப் பிரச்சினையாகும்"

என்று சுட்டிக்காட்டிய முதலமைச்சர் அண்ணு அவர்கள், அது பற்றித் தந்த விளக்கங்களும், காங்கிரசார் கூற்றுக்களை மறுத்து அளித்த பதிலுரையும் அடுத்து வெளிவரும்.

உ. பி. யிலும் குடியரசுத் தலைவர் ஆட்சி!

1967 பிப்ரவரி பொதுத் தேர்தலுக்குப் பின்னல்—கிட்டத்தட்ட 11 மாதத்துக்குள், இராஜஸ்தான், அரியானு, மேற்கு வங்காளம் ஆகிய மூன்று மாநிலங்களில் காங்கிரசு அல்லாத கட்சி ஆண்டுவருவதைக் காணச் சகியாத காங்கிரசுக்காரர்கள், குடியரசுத் தலைவர் ஆட்சியை அமைத்துவிட்டார்கள்.

நேற்று நான்காவது மாநிலமாக உத்தரப் பிரதேசத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டது.

குடியரசுத் தலைவர் கையெழுத்திட்ட அந்தத் தற்காலிக உத்தரவின் மூலம், உ. பி. மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ரூ. 81 இலட்சம் வசூல்!

சிறு சேமிப்புக் கலை விழாவில்!

சென்னை, பிப். 25—

சிறு சேமிப்பு வசூலைத் தீவிரப்படுத்துவதற்காகத் தமிழக அரசினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறு சேமிப்புக் கலை விழா, நேற்று மாலை நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

ஆளுநர் உஜ்ஜல் சிங், விழாவிற்குத் தலைமைதாங்கினர்; முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், விழாவைத் தொடங்கி வைத்தார்.

விழாவில் பங்கேற்ற நடிக—நடிகையர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற்றன.

1965-66-ம் ஆண்டில் சிறு சேமிப்பு இயக்கத்தில் தீவிர பணியாற்றியவர்களுக்கு திருமதி சர்தாரிணி உஜ்ஜல் சிங், வெள்ளிக் கோபுர கேடயங்களைப் பரிசாக அளித்தார்; அதன் பின், விழாவில் பங்கேற்ற கலைஞர்கள் அனைவருக்கும் பரிசுகள் வழங்கினர்.

பின்னி நிறுவன அதிபர், சிறு சேமிப்பு நிதிக்கு ரூ. 1-இலட்சத்துக்கான 'செக்'கையும், சோப்பு கம்பெனி அதிபர் டேவிஸ்காந்தன் ரூ. 90,000-க்கான 'செக்'கையும் முதலமைச்சர் அண்ணு அவர்களிடம் அளித்தனர்.

பின், சிறு சேமிப்புத் துணைத் தலைவர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள், கலை விழாவையொட்டி கடந்த இரண்டு திங்களாக நடைபெற்ற சிறு சேமிப்புத் தீவிர வசூலில் ரூ. 81 இலட்சம் வசூலாகியிருப்பதாகத் தெரிவித்தார்.

அண்ணுவின் பாதையில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போட்டுக்கொள்வதாக இல்லை" என்றும் பிரும்மானந்த ரெட்டி வருத்தம் தெரிவித்திருக்கிருர்.

பொருளாதாரப் பிரச்சினைப் பற்றியும், மாநிலங்களுக்கான அதிக அதிகாரங்கள் வழங்கவேண்டியதன் அவசியம் பற்றியும் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாகவே அண்ணு அவர்கள் சொல்லிக் கொண்டு வருவதைப் போலவே, இன்று கருத்துத் தெரிவித்திருக்கும் பிரும்மானந்த ரெட்டியை அடுத்து, புதுடில்லியில், செய்தியாளர்களிடம் பேசியிருக்கும் கேரள முதலமைச்சர் நம்பூதிரி பாடு அவர்களும், மொழிப் பிரச்சினையில் மத்திய அரசு கடைபிடித்து வரும் போக்குக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மொழி விவகாரத்தில் ஒரு சமரச நிலை ஏற்படுவதைத் தகர்த்தெறிந்திருக்கும் 'இந்தி வாலா'க்களுக்கு ஆதரவாகத் தலைமையமைச்சர் நடந்துகொண்டிருப்பது பற்றி இடித்துரைத்திருக்கும் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு,

" வடக்கத்தியர்களே புறக்கணித்துவிட்ட மும்மொழித் திட்டத்தினை இந்திரா காந்தி மட்டும் இன்னும் வலியுறுத்திவருவது வேடிக்கையாக இருக்கிறது"

என்று விமர்சித்திருக்கிருர்!

"இப்பிரச்சினையில், மனவேதனையுடனேயே பேசுகிறேன்" என்று கூறி, உள்ளத்து உணர்வுகளைக் காட்டிக்கொண்டிருக்கும் கேரள முதலமைச்சர், 'இந்தி பேசும் மக்கள்—கொதிப்புச் சூழ்நிலையைவிட்டு—மீண்டும் ஆட்சிமொழி பற்றி அமைதியாகச் சிந்திக்க வேண்டும்' என்றும் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

திருவாளா சந்தேகம்

'போகட்டும்' என்று ஒருவராவது இங்கே இருந்திருக்கலாம். முக்கியமானவர்கள் எல்லோருமே அல்லவா புதுடில்லிக்குப் போய்விட்டார்கள்?

சனநாயகத்தைப் பாதுகாக்க நாள் குறித்துவிட்டு, அதை விடச் சிறிய கட்சிவேலையைக் கவனிப்பதற்காக அங்கே போயிருக்கிருர்களாம்!

ஒன்று – சனநாயகத்தைப் பாதுகாக்க வேருெரு நாள் பார்த்திருக்கலாம்; அல்லது, அங்கே இருப்பவர்களுக்குச் சொல்லி, 'இப்படிப்பட்ட ஒரு நாளில் நாங்களெல்லாம் இங்கேதான் தங்கவேண்டியிருக்கிறது' என்று எடுத்துச் சொல்லியிருக்கலாம்; அல்லது—முடியுமென்ருல் — புதுடில்லி கட்சி வேலைகளை வேருெரு நாளைக்கும் ஒத்திவைத்திருக்கலாம்!

எதற்காகச் சொல்லுகிறேனென்ருல், காமராசர்–சுப்பிரமணியம் – கருத்திருமன்—இப்படி முக்கியமானவர்களெல்லோருமே நேற்றையத் தினம் அவர்கள் கட்சி நடத்திய 'விசேட'த்தில் இருக்கவில்லையே என்பதற்காகத்தான்!

சமுதாய நல்வாழ்வுக்கு

அரசுடன் ஒத்துழைப்பீர்!

சென்னை, பிப் 24—

"சமுதாயத்தில் வாழ்விழந்த மக்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் உதவுவதில் அரசுடன் கொடையுள்ளம் படைத்தவர்களும், தனிப்பட்ட அமைப்புகளும் உறுதுணையாக இருக்க வேண்டும்.

ஏட்டுச் சட்டங்கள்

"ஏட்டில் உள்ள சட்டங்களும் திட்டங்களும் நடைமுறைக்கு வந்தாலன்றி சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படாது. சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரின் முன்னேற்றந்திற்குமான பணிகளில் ஈடுபட நல்லவர்கள் முன்வர வேண்டும்.

"இந்தத் துறையில் ஈடுபட வருவோருக்கு அரசும் உறுதுணையாக நின்று உதவுமென்று உறுதி கூறுகிறேன்."

--முதலமைச்சர் அண்ணு

(அஞ்சுமன் சிறுவர் விடுதித் திறப்பு விழாவில்)

உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

மதுரை, பிப். 26—

"மாணவர்களில் ஒரு பகுதியினர், நாட்டின் பாதுகாப்பும் ஒற்றுமையும் பாதிக்கப்படும் வகையில் நடந்துகொள்கின்றனர்; நாட்டின் நலன் கருதி அத்தகைய மாணவர்கள், தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

"தேசியக் கொடி எரிப்புப் போன்ற செயல்களில் ஈடுபடுகின்ற மாணவர்கள்மீது உரிய நேரத்தில் — தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்."

—பொதுப்பணித் துறை அமைச்சர்

மு. கருணநிதி

(செய்தியாளர்களிடம்)

ஐயன்பேட்டையில் அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா நிகழ்ச்சிகள்

27—2—68, மாலை 5 மணிக்கு, ஐயன்பேட்டையில் அரசு மருத்துவமனைக் கட்டிடக் கால்கோள் விழா, சி. வி. எம். அண்ணுமலை எம்.எல்.ஏ. தலைமையிலும்—கே. எம். முத்துக்கிருட்டினன், எம். கோவிந்தராசு ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்; அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், கால்கோள் விழாவாற்றுவார்; சி. வி. இராசகோபால் எம்.எல்.சி, அ. பொ. அரசு எம்.எல்.ஏ., டாக்டர் எல். சில்வர்ஸ்டர், கு. வா. நெடுஞ்சேரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு விழா

27—2—68 மாலை 5-மணிக்கு ஐயன்பேட்டை—இளநிலைப் பள்ளி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு விழா, கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ. தலைமையிலும்—பி. கைலாசம் முன்னிலையிலும் நடைபெறும்; அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள், திறப்பு விழாவாற்றுவார்கள்; வி. சி. சம்பந்தம், எம். கோவிந்தராசு, ஏ. ஜி. பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

ஆயுளைக் கூட்டும் தேநீர்!

"தேநீர் அருந்துவதால் நீண்ட நாட்கள் உயிர் வாழ முடிகிறது" என்று சில அமெரிக்க டாக்டர்கள் கருத்தறிவித்திருக்கிருர்கள்.

பல முயல்களுக்குத் தேநீரை ஊட்டிச் சோதனைகள் நடத்திய பிறகே அவர்கள் இந்த முடிவிற்கு வந்திருக்கிருர்களாம்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.